தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, வைகாசி 1, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 மே 15, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு."

பொருள்வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் அமைச்சர்களின் விடைகளுடன் (ஆறாவது பட்டியல்) இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது@

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) வருவாய் வட்டங்கள் பிரித்தல், பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் 5 அறிக்கைகளை அளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். மேலும், அமர்ந்துகொண்டு அறிக்கைகளை அளிப்பதற்கு அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

@ 153 முதல் 270 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.